# அகம் 5 புறம் 5

*புதுமைப் பயணம்*

## அகம் 3

## (ஒத்துழைப்பு)

NIKHIL FOUNDATION
(Empowering Youth Towards Excellence)

## ஒத்துழைப்பு

ஒருமித்த உழைப்பே ஒத்துழைப்பு. இணைந்த கரங்கள் இமயம் வெல்லும் என்பர். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து ஒத்திசைவாக செயல்படுவது ஒத்துழைப்பு என்றால் அதனால் விளைவது கூட்டுறவு. ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒரு பொதுவான இலக்கை அடைய முயலும் பொழுது ஒத்துழைப்பு அங்கு கண்டிப்பாக இருக்கும். பரஸ்பரம் ஒருவருடைய பண்பு நலன்களை, விழுமியங்களை அடையாளம் கண்டுகொள்வதும், ஒரு நேர்மறையான அணுகுமுறையுடன் இருப்பதும் ஒத்துழைப்பின் அடிப்படை. பிறருடன் இணைந்து செயல்பட தயாராக இருப்பவர்களுக்கு இணைந்து செயல்பட அனைவரும் தயாராக இருப்பர். அன்பிருந்தால் அங்கு ஒத்துழைப்பு கண்டிப்பாக நிலவும். பரஸ்பர மரியாதையுணர்வு ஒத்துழைப்பை மேம்படுத்தும். தைரியம், அக்கறை, புரிதல், பகிர்தல் போன்றன ஒத்துழைப்பிற்கு அஸ்திவாரமாக அமைகின்றன. ஆக நாம் இங்கு தெரிந்து கொள்ள இருக்கும் விழுமியம்,பண்பு நலன் ஒத்துழைப்பு தான். அதனால் கிடைப்பது கூட்டுறவு அல்ல,அல்ல கூட்டுயர்வு. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என தெரியாமலா பெரியவர்கள் சொன்னார்கள். பாரதியும் தனது புதிய ஆத்திசூடியில் கூடித் தொழில் செய் என்றார்.ஒன்றுகூடி இருப்பதும் ஒத்துழைப்பும் தேவை தானா என்று பின் வரும் உதாரணம் மூலம் பார்ப்போம்.

லட்டும் பூந்தியும்:

தனித்தனி பூந்தியை ஒன்றாகப் பிடித்து லட்டு செய்யும் பொழுது அதன் சுவை கூடி விடுகின்றதல்லவா? பூந்தியை நாம் லட்டு என்று கூறுவதில்லை. எந்த ஒரு பூந்தியும் இன்னொரு பூந்தியைவிட உயர்ந்ததும் இல்லை தாழ்ந்ததும் இல்லை. நீங்கள் இந்த உலகத்தின் சிறிய பகுதியா? அல்லது உங்களுடைய விரிந்த பகுதி உலகமா? நீங்கள் உலகத்தின் சிறிய பகுதி என்றால் நீங்கள் பூந்தியாவீர்கள். ஆனால் உலகம் உங்களின் விரிந்த பகுதி என எண்ணினால் நீங்கள் லட்டு ஆவீர்கள். லட்டு ஒத்துழைப்பிற்கு அருமையான உதாரணம். பூந்திகள் ஒன்றிணைந்து சுவையான லட்டு ஆவது போல நீங்கள் சக மாணவருடன்(மனிதருடன்) ஒத்துழைத்தால் நாம் விரும்பும் கூட்டுறவு நிகழும். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி செய்வதன் விளைவைப் பின்வரும் கதை மூலம் தெரிந்துகொள்ளலாம்.

**பரஸ்பர உதவி:**

ஒரு சமயம் பூமியிலிருந்து ஒரு குழு சொர்க்கத்தையும் நரகத்தையும் பார்வையிடச் சென்றது. முதலில் அவர்கள் நரகத்திற்குச் சென்றனர். அவர்களுக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. சொர்க்கம் பார்வைக்கு அழகாகவும் அனைத்துவிதமான வசதிகளுடனும் இருந்தது. அவர்கள் சென்ற நேரமோ மதிய உணவு நேரம். சாப்பாட்டு மேஜையில் அனைத்துவிதமான ஆகாரங்களும் அழகாகப் படைக்கப்பட்டிருந்தன. ஆனால் அங்கிருந்தவர்களைப் பார்த்தால் பஞ்சத்தில் அடிபட்டவர்கள் போல இருந்தனர். மேலும் அவர்கள் அங்கிருந்த உணவைச் சாப்பிடாமல் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். ஆச்சரியம் என்னவென்றால் அவர்களுக்கு முழங்கைகள் இல்லை. கைகளை மடக்கிச் சாப்பிட இயலாது.

இந்தக் குழு சொர்க்கத்திற்கும் சென்றது. சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. அங்கிருந்த அனைத்து வசதிகளும் இங்கிருந்தன. சொர்க்கவாசிகள் அனைவரும் பொலிவான தோற்றத்துடனிருந்தனர். யாரும் பசியுடன் இல்லை. இத்தனைக்கும் அவர்களுக்கும் முழங்கைகள் இல்லை. தங்களால் கைகளை மடக்கி உண்ணமுடியாததற்கான கவலை ஏதும் அவர்களிடமில்லை. தமது நீண்ட கரங்களால் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியாக ஊட்டி விட்டுக்கொண்டிருந்தனர். அவர்களது இந்தக் கூட்டுறவானது அவர்களது வாழ்க்கையை மிகவும் மகிழ்ச்சியாக மாற்றிவிட்டது.

மேலே கூறப்பட்டுள்ள கதை பற்றி உங்கள் கருத்து(பின்வரும் மூன்று விடைகளில் உங்களுக்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றுவதைத் தேர்ந்தெடுக்கவும்)

4. பரஸ்பர உதவி மகிழ்ச்சியையும், நிறைவையும் தருகின்றது.
5. பரஸ்பர உதவியில்லாததால் நரகத்தில் இருந்தவர்கள் பசியுடன் இருக்க நேர்ந்தது.
6. நாம் மற்றவர்கள் மீது அக்கறை செலுத்த ஆரம்பித்தால் இப்பூமியே சொர்க்கமாகிவிடும்.

**கதையிலிருந்து அனுபவப்பாடம்**

4. இப்படி உதவி செய்தவர்களிடம் நீங்கள் எப்படி நடந்து கொண்டீர்கள் என்பதைப் பகிரவும்.
5. மற்றவர்களிடமிருந்து உதவி பெற்ற உங்கள் அனுபவத்தைப் பற்றிப் பகிரவும்.
6. மற்றவரது தேவைகளுக்கு எந்த அளவிற்கு நீங்கள் உதவியாக உள்ளீர்கள் என்பதைப் பகிரவும்.

**கதையிலிருந்து நாம் தெரிவது**

7. பரஸ்பர உதவி என்றால் என்ன?
8. பரஸ்பர உதவியின் பலனை நான் ஏன் கவனிக்க மறந்தேன்
9. எனது சுயநலம் எந்த அளவிற்கு உள்ளது.

ஆக பரஸ்பர உதவி பற்றியும், அது ஏற்படுத்தும் ஒத்துழைப்பு பற்றியும், அதனால் விளையும் கூட்டுறவு பற்றியும் தெளிந்தோமா?

**அடுத்ததாக மாணவர்கள் தமக்குள் சொல்லிப்பார்க்கவேண்டியது**

14. மாணவர்கள் ஒரு பொதுவான இலக்கை நோக்கி செயல்படும் பொழுது அங்கு ஒத்துழைப்பு நிலவும். உ–ம்.இணைந்து பள்ளி அணிக்காக விளையாடுவது, இணைந்து படித்து பள்ளி பெறும் தேர்ச்சி விகிதத்தை அதிகப்படுத்துவது.
15. ஒத்துழைப்பிற்கு மற்றவர்களின் பண்பு நலன்களை அடையாளம் காண்பது மற்றும் தமது செயல்பாடுகளில் நேர்மறை அணுகுமுறையை வைத்துக் கொள்வது முக்கியம்.

16. ஒத்துழைப்பினால் சுற்றியிருப்பவர்களின் நலம் விரும்புவதும் நல்ல எண்ணங்கள் வளர்த்தலும் அதனால் செயலில் மேம்பாடும் இருக்கும்.
17. ஒத்துழைப்பின் போது சிலரின் உத்திகள் பயன்படும், சிலரின் உடல் உழைப்பு தேவைப்படும், சிலரின் தலைமை தேவைப்படும், சிலரின் தொண்டு தேவைப்படும்.
18. ஒத்துழைப்பு பரஸ்பர மரியாதையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
19. ஒத்துழைப்பில் மற்றவருடன் ஒத்துழைப்பவர்களுக்கு ஒத்துழைப்பு தானாகவே கிடைக்கும்.
20. எங்கெல்லாம் அன்பு இருக்கிறதோ அங்கு ஒத்துழைப்பு இருக்கும்.
21. தைரியம், அக்கறை, புரிதல் மற்றும் பகிர்தல் ஒத்துழைப்பிற்கான அடித்தளமாக இருக்கின்றது.

**நான்கு எருதுகளும் ஒரு சிங்கமும்**

ஒரு காலத்தில் நான்கு எருதுகள் ஒற்றுமையாக சந்தோஷமாக வாழ்ந்து வந்தன. அவர்களைத் தாக்கும் நோக்கத்தில் ஒரு சிங்கம் வந்தபோது நான்கு எருதுகளும் சேர்ந்து அந்த சிங்கத்தைத் துரத்தி விட்டன. சிங்கத்திற்கு தன்னால் அந்த எருதுகளை வேட்டையாட முடியவில்லையே என்று வருத்தம். அப்போது அங்கு வந்த நரியானது சிங்கத்திற்கு தான் உதவி செய்வதாகக் கூறி எருதுகளிடையே சென்று பேசி அவர்கள் ஒற்றுமையைக் குலைத்தது. சிங்கமும் தனித்து விடப்பட்ட எருதுகளை ஒன்றொன்றாக வேட்டையாடியது. எருதுகளின் ஒத்துழைப்பில் வந்த சிக்கல் அவைகளின் உயிருக்கே ஆபத்தாய் முடிந்தன. ஒத்துழைப்பு உயிரையும் காக்கும் என்பதை பின் வரும் கதை மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

**ஒத்துழைப்பு உயிர்காக்கும்:**

சித்திரகிரீவன் ஒரு புறாக்கூட்டத்தின் தலைவன். அவனைச் சேர்ந்த புறாக்களும் அவனது தலைமையால மிகவும் சந்தோஷமாக இருந்தன. ஒரு சமயம் காட்டு வழி சென்ற பொழுது அங்கே தானியங்கள் நிறைய சிதறிக் கிடந்ததைப் பார்த்து, ஆகா, உணவு கிட்டியது என்று அவற்றை நோக்கிப் பறக்க ஆரம்பித்தன. சித்திரகிரீவனோ, இந்த இடத்தில் தானியங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை, கொஞ்சம் பொறுங்கள் என்று கூறியது. பறவைகளோ அவன் சொல் கேளாமல் பறந்து சென்று தானியங்கள் கீழ் விரிக்கப்பட்டிருந்த வலையில் சிக்கிக் கொண்டன. சித்திரகீரீவன் அவர்களோடு சென்று தானும் மாட்டிக்கொண்டு பறவைகளிடம் கூறியது. இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை. நாம் அனைவரும் ஒன்றாய்ப் பறந்தால் இந்த வலையுடனே பறந்து விடலாம். பின்பு என் நண்பன் எலியிடம் சென்று இந்த வலையை அறுத்து நாம் தப்பித்துவிடலாம் என்றது. பறவைகளும் ஒன்றாகப் பறந்து அந்த இடத்தை விட்டு தப்பித்துச் சென்றன. ஒத்துழைப்பு இங்கு பறவைகளின் உயிரையே காப்பாற்றிவிட்டதல்லவா?

**முதியவரும் சுள்ளிக்கட்டும்:**

சாவுப்படுக்கையிலிருந்த முதியவர்ஒருவர் தனது மூன்று மகன்களையும் அழைத்தார். வயதில் சிறியவனிடம் சுள்ளி ஒன்றைக் கொடுத்து உடைக்கச் சொன்னார். அவனும் எளிதாக உடைத்து விட்டான். பின் நடுவில் உள்ளவனைக் கூப்பிட்டு மூன்று சுள்ளிகளைக் கொடுத்து உடைக்கச் சொன்னார். அவனும் சற்றே சிரமப்பட்டாலும் உடைத்து விட்டான். அனைவருக்கும் மூத்தவனை அழைத்து ஒரு சுள்ளிக் கட்டைக் கொடுத்து உடைக்கச் சொன்னார். அவனால் அதை உடைக்க முடியவில்லை. முதியவரும் இந்த சுள்ளிக்கட்டு போல நீங்கள் கூட்டாக, ஒற்றுமையாக இருந்தால் யாராலும் உங்களைப் பிரிக்க முடியாது என்றார்.

**இந்திய நண்டுகளும் கூட்டுறவும்:**

தனி இந்தியன் திறமைசாலி அவன் மற்ற நாட்டவர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவன் இல்லை என்ற கூற்று உள்ளது. ஆனால் அதே சமயம் ஒரு அணியாக நம் செயல்பாடு கேள்விக்குறியாக உள்ளது. அதன் வெளிப்பாடு தான் இந்த இந்திய நண்டுகள் கதை உலகம் முழுவதும் கூறப்பட்டு வருகின்றது. ஒரு சமயம் அமெரிக்காவில் இந்தியாவிலிருந்தும், ஜப்பானிலிருந்தும், கொரியாவிலிருந்தும் நண்டுகளை இறக்குமதி செய்தனர். ஜப்பானிலிருந்தும் கொரியாவிலிருந்தும் வந்த நண்டுகள் டப்பாக்களில் அடைக்கப்பட்டு வந்திருந்தன. ஆனால் இந்தியாவிலிருந்து வந்த நண்டுகள் அடைக்கப்பட்ட டப்பாக்கள் மூடப்படாமல் இருந்தன.

இதைப் பார்த்து ஆச்சரியப்பட்ட அமெரிக்கன் ஒருவன் சக நண்பனிடம் கேட்க அவன் கூறினான். இந்தியர்கள் மிகுந்த புத்திசாலிகள். மூடிகளுக்காகும் செலவை மிச்சப்படுத்தி விட்டனர். டப்பாக்களில் அடைக்கப்பட்ட நண்டுகளில் ஒரு நண்டு தப்பிக்க முயற்சி செய்தாலும் மற்றவை அதனை பின்னுக்கு இழுத்து விடும். நமது ஒற்றுமை, கூட்டுறவு இப்படி எள்ளி நகையாடப்படுகின்றது. இந்த கதை கூறும் கருத்தென்ன? விவாதிக்கலாமா?

**பிறர்க்கு உதவுவது பற்றி வள்ளுவம்**

கூட்டுறவிற்கு அடிப்படையான பிறருக்கு உதவும் பண்பைப் பற்றி வள்ளுவர் கூறுவதைப்பற்றிப் பார்ப்போம்.

புத்தேளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்லபிற. (213)

பிறர்க்கு உதவிடும் பண்பாகிய ஒப்புரவு என்பதைவிடச் சிறந்த பண்பினை இன்றைய உலகிலும், இனி வரும் உலகிலும் காண்பது அரிது என்று வள்ளுவர் கூறுகின்றார். நாம் இதுவரை யாருக்காகவாவது எந்த ஒரு உதவியாவது செய்திருக்கிறோமா? நம்மையே நாம் கேட்க வேண்டிய கேள்வி.

**உதவும் மனப்பான்மை:**

உதவும் கரங்களாக வருவோரை யாரும் உதறித் தள்ள விரும்புவதில்லை. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் கூற்று பிறர் துன்பத்தை தமது துன்பமாகக் கொளள வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**

**நன்னயம் செய்துவிடல்**

என்ற குறள் நமக்கு தீங்கு செய்தவருக்குக் கூட நாம் நன்மையே செய்ய வேண்டும் எனப் போதிக்கின்றது. உதவும் மன்பான்மை இருந்ததால் தான் தொழுநோயாளியைக் கூட அய்யறவு எதுவுமின்றி அன்னை தெரசாவால் தொட்டு தூக்கிச் சேவை செய்ய முடிந்தது.

கொடிபடர உதவுவது போல் சக நண்பர்களுக்கு உதவியாக இருங்கள். கல் கட்டி புடலங்காயின் மதிப்பை உயர்த்துவது போல மற்றவர்களின் மதிப்பை உயர்த்த உதவியாக இருங்கள்.

கணிதமும் ஒத்துழைப்பும்:

நீயும் நானும் சேர்ந்தால் நமது மதிப்பு பின்வருமாறு என கணக்கிடலாம்.

நீயும் நானும் சேர்ந்து வந்தால் வரும் சமன்பாடு 5+5=10;

நீயா நானா என சவால் விட்டால் 5 வகுத்தல் 5 = 1;

நாம் இருவரும் உண்மையான புரிதலில் இருந்தால் 5 பெருக்கல் 5 = 25;

நீயா நானா என போட்டுப்பார்த்தால் 5–5=0;

எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் சேர்ந்து இருந்தால் 5+5=55;

நண்பன் உயர்வதற்கு உண்மையிலேயே உதவி செய்தால் அவர் மதிப்பு$5^5$=3125; நீங்கள் உயர்வதற்கு உங்கள் நண்பன் உதவி செய்தால் உங்கள் மதிப்பும் $5^5$=3125. ஆக ஒத்துழைப்பு என்பது பரஸ்பரம் நாம் உயர்வதற்கு பயன்படும் ஒரு பண்பு நலனாகும்.

**ஒத்துழைக்க ஏன் மறுக்கிறோம்:**

ஏன் கூட்டு சேர, ஒத்துழைக்க மறுக்கிறோம். நம் ஒவ்வொருவருக்கும் பலமும் உண்டு, பலவீனமும் உண்டு. நம் பலவீனம் வெளியில் தெரிந்து விடும் என்ற பயம் தான் மற்றவருடன் நெருங்கி ஒத்துழைக்கத் தடையாக இருக்கின்றது. இதை இப்படி யோசித்துப் பாருங்களேன். எனது பலவீனம் எனது நண்பனின் பலத்தோடு சேரும் பொழுது இணைந்த மதிப்பு கண்டிப்பாகக் கூடிவிடும் அல்லவா? மேலும் எனது பலம் எனது நண்பனின் பலவீனத்தோடு சேரும் பொழுது இணைந்த மதிப்பு கண்டிப்பாகக் கூடிவிடும் அல்லவா? ஆக நாம் ஒவ்வொருவரும் கூடுதல் பலத்துடன் இருப்பதற்கு நமது இந்த ஒத்துழைப்பு பயன்படுகின்றது.

**ஏற்றுக் கொள்ளல்;**

மானுட உறவுகளில் பிரச்சனை அதிகம் வருவதற்குக் காரணம் இந்த ஏற்றுக்கொள்ளல் தன்மை குறைந்து வருவதால் தான். குறை இல்லாத மனிதர் யார் இருக்க முடியும்?

**நெல்லுக்கு உமியாகிய குற்றமுண்டு**

**நீருக்கு நுரையாகிய குற்றமுண்டு**

**பூவிற்கு புறவிதழாகிய குற்றமுண்டு**

நாமென்ன அவைகளை ஒதுக்கியா வைத்து விட்டோம். ஒரு ஆப்பிள் சாப்பிட ஆசையாக உள்ளது. ஆனால் கடையில் கிடைக்கும் ஆப்பிள்களில் கரும்புள்ளிகள் நிறைய உள்ளன. என்ன செய்வோம். ஒரு கத்தியை எடுத்து கரும்புள்ளிகளைச் சீவிவிட்டு ஆப்பிளை சாப்பிட்டு விட மாட்டோமா? அதுபோல் குறையுள்ள மனிதர்களின் குறைகளை நீக்கி அவர்களை ஏற்றுக் கொள்வது நலம் பயக்கும். மனித நேயமும் மாண்புறும் குற்றம் பார்க்கின் சுற்றம் கெடும் என்ற முதுமொழியும் இதைத்தான் நமக்குக் கூறுகின்றது. குறைகளோடு ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை வளர்த்துக் கொண்டால் கூட்டுறவும் மேம்படும் அல்லவா?

**குறையை ஒத்துக்கொள்வது:**

**ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்**

**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு**

மற்றவர்கள் குற்றம் காண்பது போல ஒவ்வொருவரும் தம் தம் குற்றத்தை உணர்ந்தார்களேயானால் நிலபெற்ற நம் உயிருக்கு தீது எதுவும் வருவதில்லை என்பதைத் தான் மேலே கண்ட குறள் விளக்குகின்றது.

தம்மிலும் கீழானவரிடம் குறையை ஒத்துக்கொள்ளும் பொழுது ஒரு மனிதன் மாமனிதன் ஆகின்றான். இப்படிப்பட்டவர்கள் சேர்ந்து செயல்படும் பொழுது ஏற்படும் கூட்டுறவு சிறப்பானதாக அமையும் அல்லவா? பரஸ்பரம் நாம் ஒருவரை சார்ந்து இருக்கின்றோம். நமது இலக்குகளை, தேவைகளை மற்றும் ஆசைகளை மற்றவர்கள் உதவியுடன் தான் அடைய முடியும். ஒரு கார் உற்பத்திக் கம்பெனியின் அசெம்பிளி லைனில் ஒவ்வொரு பாகத்தையும் வெவ்வேறு ஊழியர் இணைப்பார். இவர்களின் கூட்டுறவைப் பொறுத்து தான் அசெம்பிளி லைனை விட்டு வெளி வரும் காரின் செயல்பாடு அமையும். இது போர்க்களத்திற்குப் பொருந்துமா? பார்ப்போம் பின் வரும் உண்மை நிகழ்வை.

**ஒரு கோப்பை தேநீர்:**

## புதுமைப் பயணம்

நாம் குடிக்கும் ஒரு கோப்பை தேநீரில் எத்தனை பேர் ஒத்துழைப்பு இருக்கின்றது என எண்ணிப்பாருங்கள். தேயிலைத்தூள், சக்கரை, பால் அதை ஊற்றிவைக்கின்ற டம்ளர் என எத்தனை பொருட்கள் தேனீரில் அடங்கியுள்ளன. தேயிலையை விவசாயம் செய்பவர், தண்ணீர் ஊற்றுபவர், உரம் வைப்பவர், களை எடுப்பவர், தேயிலையைப் பதப்படுத்துபவர், பேக்கிங்க செய்பவர், டெலிவரி செய்பவர், கரும்பு விளைவித்தவர், சக்கரை ஆலையில் சக்கரையாக மாற்ற உதவியவர்கள். அந்த சக்கரை டீக்கடைக்கு டெலிவரி செய்தவர், தண்ணீர் டீக்கடைக்கு வர உதவி செய்த அத்துனை நபர்கள், அடுப்புக்குத் தேவையா அத்துனை இடு பொருள்கள் அங்கு வர உதவி செய்தவர்கள், பால் மாடு வளர்த்தவர், பால் கறந்தவர், பால் பதப்படுத்தி இங்கு டெலிவரி ஆக உதவி செய்தவர்கள் என ஒரு தேநீர் கோப்பையில் 8000 நபர்களின் ஒத்துழைப்பு இருக்கின்றது என்றால் நம்ப முடிகின்றதா?

**பரஸ்பர சார்புத் தன்மை :**

கேப்டன் குமார் நமது விமானப்படை போர் விமானி. பாகிஸ்தானில் வெற்றிகரமான 45 தாக்குதல்களுக்குப் பிறகு அவரின் விமானம் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளானது. குமார் பாராசூட்டில் எதிரிகள் பகுதியில் குதித்ததால் சிறைப்பிடிக்கப்பட்டார். 2 வருடங்கள் பாகிஸ்தான் சிறையில் இருந்து. அந்த துன்பத்திலிருந்து உயிர் பிழைத்து அந்த மோசமான அனுபவத்திலிருந்து எப்படித் தப்பித்தார் என்பதைப் பல மேடைகளில் பேசி வந்தார்.

ஒருநாள் தன் மனைவியுடன் ஒரு ஹோட்டலில் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒருவர் அவரிடம் வந்து நீங்கள் குமார் தானே, பதான்கோட் எல்லையில் போர் விமானங்களை ஓட்டிக்கொண்டிருந்தீர்கள் அல்லவா? உங்கள் விமானத்தை சுட்டுவிட்டார்கள் அல்லவா? உங்களுக்கெப்படி இதெல்லாம் தெரியும் என குமார் கேட்க அந்த நபரோ உங்கள் பாராசூட்டை நான் தான் மடித்து விமானத்தில் வைத்தேன். குமார் ஆச்சரியத்தில் மூச்சுவிடவே திணறினார். அந்த மனிதனோ பாராசூட் சரியாக விரிந்தது என நினைக்கிறேன் என்றார். குமாரும், கண்டிப்பாக அது சரியா விரிந்தது இல்லாவிட்டால் இன்று நான் உங்கள் முன் நின்று பேசிக்கொண்டிருக்கமாட்டேன் என்றார்.

குமாருக்கு அன்று இரவு தூக்கமே வரவில்லை. ஹோட்டலில் தான் சந்தித்த அந்த மனிதரையே நினைத்துக்கொண்டிருந்தார். அந்த மனிதர் தனது ஏர்மேன் சீருடையில் எப்படி இருந்திருப்பார் என எண்ணிப்பார்க்கின்றார். எத்தனை தடவை அந்த மனிதரைப் பார்த்திருப்பேன். ஒரு தடவையாவது எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டிருப்பேனா? ஏனென்றால் நான் ஒரு விமானி அவர் ஒரு சாதாரண ஏர்மேன்.

பல மணிநேரங்கள் அவருக்குத் தூக்கமே வரவில்லை. அந்த ஏர்மேனைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தார். விமான ஹேங்கர் பகுதியிலிருக்கும் அந்த நீளமான மர மேஜையில் வைத்து பாராசூட் துணியை நூலோடு சேர்த்து தைத்து பத்திரமாக மடித்து வைக்கும் பொழுது அவர் கைகளில் தனக்குத் தெரியாத யாரோ ஒருவரோடு தலையெழுத்தும் சேர்ந்திருக்கும் என்று நினைத்துக்கூடப் பாத்திருக்க மாட்டார்.

இப்பொழுது குமார் தனது ஆடியன்ஸைப் பார்த்துக் கேட்கும் கேள்விகளில் ஒன்று:

உங்கள் பாராசூட்டை யார் மடித்து வைத்தது?

ஒவ்வொருவருக்கும் அன்றைய நாளைப் பாதுகாப்பாகக் கழிக்க யாரோ ஒருவரின் துணை தேவைப்படுகின்றது. உணவு தர ஒருவர், ஆடை துவைத்துத் தர ஒருவர், என யாரோ ஒருவர் நமக்கு உதவியாக இருக்கின்றார். அன்றாடம் நாம் சந்திக்கும் சவால்களில் முக்கியமான சில விஷயங்களை மறந்து விடுகின்றோம். ஒரு வணக்கம் சொல்லவோ, நன்றி சொல்லவோ, பாராட்டவோ மறந்து விடுகின்றோம். நான் உன்னை நினைத்துப் பெருமைப்படுகின்றேன் என்ற நான்கு வார்த்தைகள் அந்த மனிதர் சந்தோஷப்படக்கூடிய விலைமதிக்கமுடியாத முக்கியமான வார்த்தைகளாகும். மனிதர்களை அவர்கள் எப்படி இருக்கவேண்டுமோ அதைப்போன்று நடத்துங்கள். அதன்மூலம் அவர்கள் திறன் உச்சத்தை அடைய உதவுங்கள். ஒவ்வொருவரையும் அவர் எப்படி இருந்தாலும், என்ன செய்தாலும் அவர்கள் மதிப்பை உணர்ந்து பாராட்டுங்கள். என்ன வேலையிலிருந்தாலும், என்ன செய்தாலும் ஒவ்வொருவரும் முக்கியமானவரே, சமுதாயத்திற்குத் தேவையானவரே.

பாராட்டு என்பது ஒரு அருமையான விஷயம். ஒவ்வொருவரிடம் உள்ள ஏன் நம்மிடம் உள்ள சிறப்பை அது வெளிக்கொணர்கின்றது.– வோல்டேர்.

மாணவனாக உங்கள் வேலைகளுக்காக உங்களுக்கு மற்றவர்கள் உதவி தேவைப்படுகின்றதா? காலையில் பள்ளிக்குக் கிளம்பிச் செல்ல, புத்தகப் பையை எடுத்து வைக்க, சாப்பிட, பாடம் படிக்க, வீட்டுப் பாடம் எழுத இப்படி எத்தனை எத்தனையோ நமது வேலைகளுக்காக மற்றவர்கள் உதவி தேவைப் படுகின்றதல்லவா? அப்படி உதவி செய்த யாருக்காகவாவது நீங்கள் நன்றி சொல்லியிருப்பீர்களா? அலுவலகப் பணியாக இருந்தாலும், குடும்பமாக இருந்தாலும், பள்ளியாக இருந்தாலும் கூட ஒத்துழைப்பு முக்கியம் என்பதுதான் நாம் மேலே கண்ட கதைகள், சம்பவங்கள் மூலம் தெரிய வருகின்றது.

**நிறைவுரை:**

ஒத்த செயல்பாடுடையவர்கள், ஒத்த சிந்தனையுடையவர்கள் இருந்தால் தான் ஒத்துழைப்பு சிறக்கும் என்பதல்ல. பலவகையான பழங்களைச் சேர்த்துச் செய்யும் பழக்கலவை சுவை மிகுந்ததாக உள்ளதல்லவா? வெவ்வேறு வகையான மாங்காய் செடிகளை இணைத்து உருவாக்கும் ஒட்டு மாங்கனி சுவையில் விஞ்சி நிற்கிறதல்லவா? ஆக வெவ்வேறுவிதமான சிந்தனை

உடையவர்கள், அணுகுமுறை உடையவர்கள், குணாதிசயம் உடையவர்கள் என யாராக இருந்தாலும் ஒத்துழைப்புடன் செயல்பட்டால் எண்ணியதை அடையமுடியும்.

ஆக ஒத்துழைப்பை உங்கள் மந்திரமாக்கிக் கொள்ளுங்கள். நாடு நலம் பெறும்.